## வாக்குமூலம்

## சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.
## O.S.No.1085/2022
## வழக்கு சாட்சி PW.1

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கருப்புச்சாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : ஆறுமுககவுண்டர் | கணவர் பெயர் | : |
| கிராமம் | : குப்பணம்பாளையம் | வயது | : சுமார் 49 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 02.09.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை :</u>

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–23 ல் சர்வே எண்.831/3 என்ற புலத்தில் தென்னை 0.05.0 மட்டும் தான் உள்ளது என்று சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல. முழுமையாக அனைத்து சொத்திலும் தென்னை வைத்துள்ளேன். வா.சா.ஆ.24 ஆவணத்தில் சர்வே எண்.841 என்ற புலமானது தங்கம்மாள் பெயரில் மட்டுமே உள்ளது என்றால் ? சரியல்ல. அந்த புலத்தில் 1/6 பங்கு பாகம் கிணற்றில் மட்டும் தங்கம்மாளுக்கு உள்ளது. வா.சா.ஆ–24 ஆவணத்தில் 0.040.0 விஸ்தீரணத்திற்கு தென்னை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? முழு விஸ்தீரணத்திற்கும் தென்னை உள்ளது. வா.சா.ஆ.25 ஆவணத்தில் சர்வே எண்.841–ல் தங்கம்மாள் வகையறா பெயரில் உள்ளது என்றால் ? சரியல்ல. தங்கம்மாள் என்பவருக்கு கிணற்றில் மட்டும் தான் பாத்தியம் உள்ளது. வா.சா.ஆ.25 ல் சர்வே எண்.841ல் தங்கம்மாள் வகையறா இடத்தில் 0.50.0 நிலமானது தென்னை மட்டும் என்றும், மக்காச்சோளம் 0.40.0 விஸ்தீரணத்தில் பயிரிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல. முழு விஸ்தீரணத்திற்கும் தென்னை மரம் உள்ளது. ஊடுபயிராக

மக்காச்சோளம் பயிரிட்டு இருந்தேன். வா.சா.ஆ.26 ல் சர்வே எண்.840/1–ல் தென்னை 0.03.0 விஸ்தீரணத்திலும், சர்வே எண்.840/2–ல் தென்னை 0.02.0 விஸ்தீரணத்திலும், சர்வே எண்.840/3–ல் தென்னை 0.02.0 விஸ்தீரணத்திலும் பயிர் செய்யப்பட்டுள்ளதாக சாகுபடி அடங்கல் கணக்கில் உள்ளது என்றால் ? சரியல்ல. முழு விஸ்தீரணத்திலும் தென்னை உள்ளது. சர்வே எண்.840/4–ல் தரிசு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? தென்னை வைத்திருந்தேன். ஆணையர் அறிக்கையிலும் தென்னை மரம் இருந்தது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களான வா.சா.ஆ.23 முதல் வா.சா.ஆ.26 வரையிலான ஆவணங்கள் அசல் வழக்கு 2019–ம் ஆண்டு தாக்கல் செய்த பிறகு தற்போது தான் வழக்கிற்காக வேண்டி வருவாய்துறையினரால் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அடங்கலில் எவ்வளவு இடத்தில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது என்பதை காண்பிக்க கூடிய ஆவணங்கள் அல்ல என்றால் ? சரியல்ல. நான் சரியாக தென்னை மரங்கள் பயிர் செய்ததற்கான விஸ்தீரணத்தை காட்டுவதற்கான ஆவணங்கள் என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ? நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பயிர் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.23 முதல் வா.சா.ஆ–26 வரையிலான அனைத்து ஆவணங்களும் அசல் வழக்கு தாக்கல் செய்த தேதிக்கு பிறகு பயிர் விபரத்தை பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் ? சரிதான்.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.09.02 18:16:01 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்